# <u>கரூர் மாநகராட்சி</u>

**2024**ம் ஆண்டு மார்ச் மாதம் **11**ம் தேதி திங்கட்கிழமை காலை **10.00** மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசர கூட்டம் நடைபெறும்.அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.

## <u>பொருள்கள்</u>

**1)** கரூர் மாநகராட்சி மண்டலம் **3** மற்றும் **4** பகுதிகளுக்கும் காவேரி ஆற்று பகுதியிலுள்ள கட்டளை பதியிலிருந்து குடிநீர் நீரேற்றம் செய்யப்படுகிறது. தற்போது கோடை காலமாக உள்ளதால், காவேரி ஆற்றில் நீர்வரத்து மிகவும் குறைந்துள்ளதால், காவேரி ஆற்றின் நடுப்பகுதியில் சிறிய ஓடையாக மட்டுமே குடிநீர் நீரோட்டம் உள்ளதால் மாநகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் நீரேற்றப்படும் சணப்பிரட்டி பகுதி மற்றும் தாந்தோணி KFW Scheme பகுதிகளுக்கான Collector well பகுதியில் நீரோட்டம் குறைவாக உள்ளது. மேலும் வரும் காலங்களில் இதுவும் குறையும் வாய்ப்புள்ளது. எனவே இனிவரும் காலங்களில் கோடையை சமாளிக்கும் பொருட்டு மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் தடைப்படாமல் சாமாளிக்க காவேரி ஆற்றின் நடுப்பகுதியிலிருந்து சணப்பிரட்டி தலைமை குடிநீர் நீரேற்று நிலையம் மற்றும் தாந்தோணி KFW திட்டத்தின் பகுதிக்கான Collector well பகுதிகளுக்கு நீரோட்ட பாதையை Hittachi வாகனங்களை கொண்டு அமைக்கும் பணி மேற்கொள்ளும் பட்சத்தில் குடிநீர் பற்றாக்குறை இல்லாமல் குடிநீர் நீரேற்றம் செய்ய இயலும் எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**1.50** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.**1.50** இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1830** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**2)** கரூர் மாநகராட்சி மண்டலம் **3** க்குட்பட்ட பகுதிகளுக்கு கட்டளை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து தாந்தோணி பழைய திட்டம் மற்றும் சணப்பிரட்டி திட்டம் என்ற இரண்டு திட்டங்களின் மூலம் காவேரி ஆற்றை நீராதாரமாக கொண்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. காவேரி ஆற்றில் தற்போது நீர்வரத்து மிகவும் குறைவாக இருப்பதால் தற்போது பழைய தாந்தோணி குடிநீர் திட்டத்திற்கான நீரேற்றத்தின் அழுத்தம் குறைந்து காணப்படுவதால் குடிநீர் நீரேற்றத்தின் அளவு குறைவதால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் கால அவகாசம் அதிகப்படியாவதால் வழங்கப்படும் கால இடைவெளியும் அதிகமாகிறது. மேலும் தற்போது எதிர்வரும் கோடைகாலத்தை எதிர்கொள்வதற்கு தயராகவும், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதற்கும் காவேரி ஆற்றில் கட்டளை தலைமை நீரேற்று நிலையத்தில் அருகில் ஒரு புதிய

ஆழ்குழாய் கிணறு அமைத்து 20 எச்.பி நீர் மூழ்கி மோட்டார் ஸ்டாட்டர், பேனல் மற்றும் 300 மீட்டர் கேபிள் அமைத்தும், 300 மீட்டர் நீளத்தில் GI Pipe அமைத்தால் தற்போது பெறும் குறைந்த அளவு தண்ணீரை சமன் செய்து ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் குடிநீரை வழங்க இயலும். எனவே இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.14.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.14.50 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1831** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

3) கரூர் மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.48 வெங்கக்கல்பட்டி முதல் வார்டு எண்.44 அமராவதி நகர் மதுரை வீரன் கோயில் வரை 3.30கி.மீ நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலைத்துறையின் சாலையில் இருபுமும் புதியதாக மழை நீர் வடிகால் கட்டும் பணிகள் மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் புதிதாக மழை நீர் வடிகால் அமைக்கப்படும் இடத்தில் மாநகராட்சி குடிநீர் பிரதானக் குழாய்கள் 200 mm DI, 300 mm DI மற்றும் 400 mm DI குழாய்கள் மற்றும் 160 mm PVC குழாய்கள் உள்ளது. மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்வதால் குடிநீர் பிரதானக்குழாய்கள் சேதமடைவதால் வெங்கக்கல்பட்டி, காளியப்பனூர் மற்றும் வார்டு எண்.44, 42ல் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும். எனவே மழை நீர் வடிகால் அமைக்கப்படும் இடங்களிலுள்ள 200,300,400 mm dia DI குழாய்களை சேதமடையாமல் 2.24 கி.மீ நீளத்திற்கு அருகில் மாற்றியமைக்கவும், சேதமடையும் பி.வி.சி குழாய்களுக்கு பதிலாக புதியதாக 2.30 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் பதிக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.23.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.23.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1832** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

4) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 11 மற்றும் 28 மற்றும் மண்டலம் 2,3 பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை திட்டம் செயல்பட்டு வருகிறது. மேற்காணும் பாதாள சாக்கடை மெயின் லையன்அடைப்பு மற்றும் 3013 பாதாள சாக்கடை ஆய்வு குழிகளும், 92.25கி.மீ நீளத்திற்கு பிரதான

குழாய்களும், 2.97 கி.மீ நீளத்திற்கு நீரேற்று பிரதான குழாய்களும் அமைந்துள்ளன. தற்போது உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மனிதனே மனிதக்கழிவுகளை கையாளும் தடைச்சட்டம் உள்ளதால் மாநகராட்சியில் ஒரு ரோபோட்டிக் இயந்திரம் உள்ளது. அந்த இயந்திரத்தை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கும் மேற்படி இயந்திரத்தை பயன்படுத்தி அள்ளப்பட்ட வண்டல்களை அப்புறப்படுத்தவும் மற்றும் மனித ஆய்வுக்குழிகளை திறப்பதற்கான தளவாட பொருட்கள் மற்றும் கருவிகள் எடுத்துச்செல்ல ஒரு டாட்டா ACC வாகனம் தேவைப்படுகிறது. மேற்படி வாகனத்தை சுமார் 196 நாட்கள் பயன்படுத்துவதற்கு நாளொன்றுக்கு ரூ.2300 வீதம் மாவட்ட வாடகை நிர்ணயம் வழிக்காட்டுதல்படி ரூ.196 X2300=4,50,800 அதாவது சுமார் ரூ451000/—க்கு பணி மேற்கொள்ள மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி சட்ட விதி 57ன்படி பணிக்கு அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை (சதவீகிதத்தில் ரூ ) |
|---|---|---|
| 1) | M/S.Sunmathi Construction, Karur | 0.00%குறைவு |
| 2) | Thiru,G.Nanthakumar, Karur | 1.74% அதிகம் |
| 3) | Sri;Krishna Traders, Karur | 2.61% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s.Sunmathi Construction, Karur** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகைரூ.4,51,000/—ஐ மாநகராட்சி புதைவடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1833 பதிவு செய்யப்பட்டது**

5) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட கரூர் ஆதி மாரியம்மன் கோவில் திருவிழா 2023ஆம் ஆண்டு மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் அதிகம் கூடும் பகுதிகளில் மைக் செட், மின் விளக்கு, ஆற்றங்கரையில் மண் மேடுகளை சீரமைத்து பொதுமக்கள் செல்வதற்காக பாதை அமைத்தும், மற்றும் கோவில் வளாகத்தில் தரைவிரிப்புகள் மேற்கொள்ளும் பணியினை உடன் மேற்கொள்ள தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த

தொகைக்கு விலைப்புள்ளி அளித்துள்ள M/s.TMB Earth Moving, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. 2.50 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும்மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வா. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவிகிதத்தில். |
|---|---|---|
| 1 | M/s.TMB Earth Moving, Karur | மதிப்பீட்டுத் தொகை |
| 2 | M/S.RPS Construction, Karur | 0.78% above |
| 3 | Thiru.Loganathan, Karur | 1.80% above |

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1834 பதிவு செய்யப்பட்டது**

**6)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்திற்கான விண்ணப்பம் பொது விநியோக திட்ட நியாய விலைக்கடைகள் மூலம் வழங்குவது, பெறப்பட்ட விண்ணப்பங்களை பதிவு செய்ய இரண்டு கட்டங்களாக பணிகளை மேற்கொள்வதற்கு தற்காலிக நிழற்கூடங்கள் அமைத்து தண்ணீர் வசதி மற்றும் சுகாதார வசதிகள் செய்யவும் மற்றும் போர்ட்டபல் கழிவறை அமைத்து அதற்கான பைப்புகள் மற்றும் தளவாட பொருட்கள் வாங்கப்பட்டு பணிகளை மேற்கொள்வதற்கு பணியினை உடன் மேற்கொள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Eagle Packers, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. 18.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வா. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவிகிதத்தில். |
|---|---|---|
| 1 | M/s.Eagle Packers, Karur | 0.12% Less |
| 2 | M/S.CVM & Co, Karur | 0.90% above |
| 3 | Thiru.Loganathan, Karur | 1.10% above |

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1835 பதிவு செய்யப்பட்டது**

**7)**கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாந்தோணி கிராமம் புல எண்.655/1A2, 655/1B2 & 655/1B3–ல் 2.39 ஏக்கர் இடத்திற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களால் மனைப்பிரிவிலுள்ள சாலையை பத்திர பதிவு ஆவண எண்.**10594/2022** வாயிலாக பெற்றுக்கொண்டு கடித ந.க.எண்.IY8KG616/2023/TCP நாள்.**09.11.2023**ல் மனைப்பிரிவிற்கு SWP/DTCP/KARUR/LAYOUTNO.209/2023 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மேற்படி மனைப்பிரிவில் அனைத்து வசதிகளும் முறையாக அமைக்கப்பட்டுள்ளது என்கிற மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின் குறிப்பினை ஏற்று சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி வழங்குவதுடன் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம். **(769/2024/எப்1)**

**தீர்மான எண்.1836** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

மேயர்
கரூர் மாநகராட்சி